**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி : 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

**பெறுநர்,**
ஆசிரியர்,

தேதி : 24.12.2025

**ஐயா,**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**டிரோன் தொழில்நுட்பத்திற்கு உகந்த நானோ உரத்தின் கண்டுபிடிப்புக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்துக்கு காப்புரிமை வழங்கப்பட்டது**

டிரோன் பயன்பாட்டுக்கான புதிய நானோ உரக் கண்டுபிடிப்பிற்கான காப்புரிமை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு இந்திய அரசின் காப்புரிமை அலுவலகத்தால் வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் டி. பிரதீப், டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியன், மற்றும் முனைவர் எஸ். மாரிமுத்து ஆகியோரால் இந்தக் காப்புரிமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த காப்புரிமை பெற்ற தொழில்நுட்பம் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக, இயற்கை வள மேலாண்மை இயக்குநரகத்தின் வேளாண் நானோ தொழில்நுட்ப மையத்தில் டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியன் மற்றும் டாக்டர் எஸ். மாரிமுத்து ஆகியோர் வழிகாட்டுதலின் கீழ், முனைவர் டி. பிரதீப் அவர்களால் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக உருவாக்கபட்டது. தற்பொழுது பயன்பாட்டில் உள்ள திரவ நைட்ரஜன் உரங்கள் ஊட்டச்சத்து குறைவாக இருப்பதோடு மட்டுமின்றி அவைகள் ட்ரான் மூலம் தெளிக்கும் போது தெளிப்பு சிதறல் மூலமாக வீணாகிறது. இந்த குறைகளை களைய ஆராய்ச்சியாளர்கள் திரவ உரத்தின் நைட்ரஜன் உள்ளடக்கத்தை அதிகரிக்க ஒரு புதிய தொழில் நுட்பத்தை மேற்கொண்டனர் . இந்த முறையில், ஊட்டச்சத்து சில்லிகா நானோ கணிகைகளால் மூடப்பட்டு மற்றும் பாலிஎதிலீன் கிளைகோல் மூலம் இணைக்கப்படுவதால், நைட்ரஜன் இருப்பு சுமார் 32–36% ஆக அதிகரிக்கிறது. மேலும் இந்த புதிய நானோ உரம் அதிக அடர்த்தி மற்றும் மேம்பட்ட நிலைத்தன்மையைக் கொண்டுள்ளது. இதனால் ஊட்டச்சத்து வழங்கல் துல்லியமாகவும், தெளிப்பு சிதறல் குறைவாகவும் இருக்கும்

இந்தக் காப்புரிமைப் பெற தேவையான மனு தயாரித்தல் முதல், காப்புரிமை வழக்கறிஞருடன் சேர்ந்து அதைச் சமர்ப்பிக்கும் வேலை வரை அனைத்தும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முதுகலை பட்டமேற்படிப்பு பயிலகத்தின் காப்புரிமை பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**